அசல் வழக்கு எண். 32/2019 நாள்: 16.06.2026

பி.சா.2 திரு.ராஜூ

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வாதி, பிரதிவாதிகள் ஒரே ஊர்காரர்கள் என்றால் சரிதான். யாருக்காக சாட்சி சொல்ல வந்தேன் என்றால் ஜெயராமனுக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். ரவி (எ) கோவிந்தராஜ் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும், ஜெயராமனுக்கு சொந்தமான இடத்தில் ரவிக்கு உரிமை உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். அது சம்மந்தமாக ஜெயராமனுக்கு ஆதரவாக சாட்சி சொல்ல வருமாறு என்னை அழைத்ததால் நான் சாட்சி சொல்ல வந்தேனா என்றால் ஜெயராமன் அனுபவித்து வருவதாக சொல்லுமாறு சொன்னதால் நான் சாட்சி சொல்ல வந்தேன். வழக்கு சொத்தில் தற்சமயம் என்ன உள்ளது என்றால் மாட்டுக்கொட்டகை உள்ளது.

2) மேற்படி மாட்டுக்கொட்டகை உள்ள இடத்திற்காகதான் நான் சாட்சி சொல்ல வந்தேனா என்றால் ஆமாம். நான் வழக்கு சொத்து உள்ள தெருவை சார்ந்தவர் அல்ல, பக்கத்து தெருவை சார்ந்தவர் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் குடியிருக்கும் தெருவில் வேறு நபர்களும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த தெருவை சார்ந்தவர்கள் எவரும் சாட்சி சொல்ல வராததால் என்னை சாட்சி சொல்ல அழைத்ததால் நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் புல எண்.192/1 ஆகும். மேற்படி சர்வே எண்ணில்தான் மாட்டுக்கொட்டகை உள்ளதா என்றால் ஆமாம். ரவி (எ) கோவிந்தராஜ் தாக்கல் செய்த வழக்கு சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும், வடக்கில் வெங்கடேசபெருமாள் கோவில், தெற்கில் திருவேங்கடம் வேளார் வீடு, மேற்கில் சின்னான் மனை, கிழக்கில் ராணி வீடு உள்ளது.

3) மேற்படி நான்கெல்லைக்குள் ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் சிரஞ்சீவி என்பவர் வாடகைக்கு குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, மேற்படி ராணியின் மகன்தான் சிரஞ்சீவி அவரது அம்மா வீட்டில்தான் குடியிருக்கிறார். மேற்படி ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்ட வீட்டிற்கு கிழக்கில் ராணி வீடு கட்டி குடியிருந்து பட்டா பெற்று வசித்து வருகிறார் என்றால் இல்லை, வீடே இல்லை. புல எண்.192/32 என்ற எண்ணில்

வீடு உள்ளது தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி புல எண்.192/32-க்கு வாதி ரவி (எ) கோவிந்தராஜ் என்பவருக்கு பட்டா கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி அனுபோகம் செய்து வந்த இடத்தை கடந்த 14.03.2023 அன்று நிலஅளவையர் அளவீடு செய்ய வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4) அவ்வாறு நிலஅளவை செய்ய வந்தபோது நிலஅளவை செய்தால் மண்ணெனன்ணெய் ஊற்றி கொளுத்திக்கொள்வேன் என்று ஜெயராமன் மிரட்டிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதனால் வாதி ரவி திருக்காட்டுப்பள்ளி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தவிவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த இடம் சம்மந்தமாக ஜெயராமன் மீது ரவி (எ) கோவிந்தராஜ் வழக்கு தாக்கல் செய்திருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும், வாதி ரவி (எ) கோவிந்தராஜ் வழக்கு சொத்து அவருக்கு சொந்தமானது என்று சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக ஜெயராமன் சொல்லி தெரியும். எனக்கு வழக்கு பற்றி நேரடியாக எதுவும் தெரியாது ஜெயராமன் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான்.

5) எனக்கு வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது என்றாலும், காலங்காலமாக ரவி (எ) கோவிந்தராஜ் அவரது முன்னோர்கள் காலம் முதல் அனுபவித்து வந்து, அவர்களுக்குபிறகு ரவி (எ) கோவிந்தராஜ் தாவா இடத்தை அனுபவம் செய்து அதில் ஆஸ்பெஸ்டாஸ் வீடு கட்டப்பட்டு அதனை சிரஞ்சீவி என்பவருக்கு வாடகைக்கு கொடுத்துவிட்டுள்ளார் என்றாலும் சரியல்ல, அந்த இடம் காலி இடமாக இருந்து அதில் மாடு கட்டி, குப்பைப்போட்டு வந்தார்கள் நான்தான் அதை சுத்தம் செய்து மாட்டுக்கொட்டகை போட்டுக்கொடுத்தேன். மேற்படி மாட்டுக்கொட்டகையை புல எண்.192/1ல் தான் போட்டுக்கொடுத்தேன் என்றாலும், புல எண்.192/32-ல் அவ்வாறு மாட்டுக்கொட்டகை போட வில்லை என்றாலும் அதுகுறித்து என்னால் கூற இயலவில்லை.

ம.வி.இல்லை.

S.d/ Raju

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.16 06:30:08 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU